1975 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே. காங்கேயம் பகுதியை நானும் சுற்றிப் பார்த்து இருக்கிறேன். சிறிய விவசாயிகளாக இருந்தாலும் கூட பெரும்பான்மையான இடங்களில் புல் வளர்த்து கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் சம்பாதிக்கிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற நல்ல பாலை மார்கெட்டுக்குக்கொண்டு வரவேண்டு மென்ற அடிப்படையில்தான் ஈரோட்டில் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் என்று தனியாக அமைத்து அதன் மூலம் செயல்பட்டு வருகிறோம். இப்போது இருக்கின்ற பால் யூனியனை சரியாக நடத்தி பால் உற்பத்தி செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

Milk with fat contents

*659 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the possibility of introducing a new type of milk with high fat content for consumers has been considered by the Tamil Nadu Dairy Development Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) அதிக கொழுப்புச் சத்துள்ள புதிய வகை. பாலை மக்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது பால் பூரா வும் டோன்ட் மில்க் ஆக இருக்கின்றது. ஏற்கெனவே பாலை கிராமப் பகுதியிலிருந்து விலைக்கு வாங்கி இங்கே கொண்டுவந்து ஒரு லிட்டருக்கு மிக்ஸ் பண்ணி பதப்படுத்தி விநியோகப்படுத்தப் படுகிறது. இது எந்த விதத்தில் சத்துள்ள பாலாக இருக்க முடியும்? இதைத்தான் ஆஸ்பத்திரியில் விநியோகிக்கிறார்கள். இந்தப் பாலில் சத்து அதிகரிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே சாதாரணமாக பசு மாட்டுப்பாலில் சுமார் 6 சதவிகித கொழுப்புச் சத்து இருப்பதாகவும், எருமைப்பாலில் 8 சதவீதம், $8\frac{1}{2}$ சதவீதம் கொழுப்புச் சத்து இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் மக்களுக்குத் தேவையான சரிசமமான கொழுப்புச் சத்து 3 சத வீதம் இருந்தால் போதும் என்று விஞ்ஞான ரீதியில் சொல் கிறார்கள். அந்த அடிப்படையில் 3 சதவீதம் கொழுப்புச் சத்துள்ள பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.80-க்கு விற்கிறது. இந்த அளவு கொழுப்புச் சத்துள்ள பால் நம்முடைய பால் பண்ணையில்

மட்டுமல்ல, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத், பரோடா போன்ற இடங்களில் இருக்கின்ற பால் பண்ணைகளிலும் இதே அளவு கொழுப்புச் சத்துள்ள பால்தான் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அளவு கொழுப்புச் சத்து நமக்குப் போதும் என்று விஞ்ஞான ரீதியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆவுடையார் கோயில், தஞ்சாவூர்

*660. வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஆவுடையார் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மேற்படி திருக்கோயிலின் திருப்பணிக்காக சுமார் $10\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதில் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் ஏற்கெனவே முடிக்கப் பட்டுவிட்டன. மீதியுள்ள வேலைகள் துவங்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயில் பழம்பெரும் சிறப் புடையது. அந்தக் கோயிலை புதுப்பிப்பதை நான் வரவேற்கிறேன். புதுப்பிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து உதவி கொடுக்கப்பட் டிருக்கிறதா ? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் எங்கே இருந்து உதவி பெறப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வெளி நாட்டு உதவி எதுவும் கிடையாது. அந்தக் கோயில் சார்பில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில் தான் நிதி பொதுமக்களிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் பெறப்பட்டு, புதுப்பித்தல் பணி செய்யப்பட்டு வருகிறது.

Training for science teachers

*641 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government propose to retrain B.T. Science Teachers for handling the new upgraded syllabus to be introduced from 1975-76; and

(*b*) if so, the details thereof?